செ.வெ. எண்: 121 நாள்: 10.02.2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
அவர்கள் கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்கவேண்டும் என
உத்தரவிட்டதற்கிணங்க
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு.**செல்லூர் கே. ராஜூ** அவர்கள் தலைமையில்
தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்க
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு

********

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் கடந்த 2001–2006 வரை முதலமைச்சராக இருந்தபோதே அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்க வேண்டும் என உத்தரவிட்டதற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தற்போது கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் படிப்படியாகக் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கையில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (10.2.2012) காலை 10.00 மணி அளவில் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் கணினி நிறுவனங்களின் நிபுணர்களுடன் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

அப்போது, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் கணினிமயமாக்கல் தொடர்பான மைய வங்கியியல் தீர்வு (Core Banking) மற்றும் மின்னணு வங்கியியல் சேவை (e-banking) ஆகிய அனைத்துப் பணிகளும் முடிவடைந்துவிட்டதாகவும், 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொருத்தமட்டில் கணினிமயமாக்கல் பணி முடிவடைந்து தற்போது Core Banking முறையை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் 176 கிளைகளும், 1559 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், மொத்தம் உள்ள 4534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 4496 சங்கங்களில் மின்னணு வங்கியியல் சேவை ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன. இப்பணிகள் முடிவடைந்த பின்னர், கூட்டுறவு வங்கிகளும் மற்றும் சங்கங்களும் வணிக வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கு இணையாக மக்களுக்கு சேவையளிக்கும் வசதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசின் நலத்திட்டங்களான முதியோர் ஓய்வூதியம், மாற்றுத் திறனாளிகள் நல உதவிகள், வறட்சி மற்றும் வெள்ள நிவாரணத் தொகைகளை கிராம அளவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்றுக்கொள்ள இயலும். இதனால், கூட்டுறவு வங்கிகளுக்கிடையே அதிகப்படியான பணப்புழக்கம் உருவாக வாய்ப்புள்ளது.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர் திருமதி எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., துணைச் செயலர் திருமதி சி.டி.மணிமேகலை,இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ப.அண்ணாமலை, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ஆர்.ராஜேந்திரன், திரு.ஆர்.கார்த்திகேயன், திரு.எம்.ப்பி.சிவன்அருள் மற்றும் கணினி நிபுணர்கள், உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**